
# ஆத்ம ஜோதி



திருவள்ளுவர்

ஓம்

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே – சுத்தானந்தர்

சோதி 5 | விஜய ஹூ வைகாசி மாசம் திகதி 1 | சுடர் 7

## பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 1 | திருவள்ளுவர் ... ... | 169 |
| 2 | திருக்குறளே திருவள்ளுவர் .... | 170 |
| 3 | சைவம் வளர்த்த மாது சிரோன்மணி .... | 171 |
| 4 | திருவள்ளுவர் திருநாள் ... .... | 175 |
| 5 | வள்ளுவர் நாளைத் தேசிய விழாவாக கொண்டாடுங்கள் | 177 |
| 6 | கடவுளைப் பணிதலே கற்றதன் பயன் .... | 179 |
| 7 | வள்ளுவர் அருளிய வாழ்க்கைக் கலை ... | 181 |
| 8 | வள்ளுவர் வாசுகி இல்லற வாழ்வு .... | 182 |
| 9 | ஆதிய ஜோதியின் அவதார மகிமை .... | 184 |
| 10 | திருக்குறளே! உனக்கு ஈடுண்டோ? ... | 185 |
| 11 | கடவுளைக் கண்டீரோ? .... .... | 186 |
| 12 | மெய்ஞ்ஞானத்திற்கு மார்க்கம் ... | 191 |
| 13 | திவ்ய ஜீவன சங்கம் ... ... | 194 |
| 14 | செய்தித்திரட்டு ... ... | 196 |
| 15 | குறள் வணக்கம் | (கவர் 3ம் பக்கம்) |

## ஆத்ம ஜோதி

✻ ஆயுள்சந்தா ரூபா 75/- ✻ வருடசந்தா ரூபா 3/-

ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டி (இலங்கை)

கௌரவ ஆசிரியர்.- க. இராமச்சந்திரன்
நம் 60டீல் பிளேஸ் கொள்ளுப்பிட்டி, கொழும்பு

பதிப்பாசிரியர்: நா. முத்தையா
ஆத்மஜோதிநிலையம் நாவலப்பிட்டி.

# திருவள்ளுவர்

[கவிமணி-தே. வி.]

இம்மை மறுமையின்—பயன்கள்
எவருமே யடையச்
செம்மை நெறியினை—விளக்கும்
தெய்வநூல் செய்தோன். 1

வழுக்கள் போக்க வந்தோன்—நல்ல
வாழ்வை ஆக்க வந்தோன்;
ஒழுக்கங் காட்ட வந்தோன்—தமிழுக்கு
உயிரை ஊட்ட வந்தோன். 2

தோன்மை நூல்களெல்லாம்—நன்கு
துருவி ஆராய்ந்து
நன்மை தீமைகள்—வகுத்த
நாவலர் கோமான். 3

எதை மறந்தாலும்—உள்ளம்
என்றுமே மறவா
போதுமறை தந்த—தேவன்
பொய் சொல்லாப் புலவன். 4

அறிவின் எல்லை கண்டோன்—உலகை
அளந்து கணக்கிட்டோன்;
தறியில் ஆடை நெய்தோன்—தமிழில்
தருமநூல் நூற்றோன். 5

சாதி ஒன்றேயாம்—தமிழர்
சமயம் ஒன்றேயாம்
நீதி ஒன்றேயாம்—என்று
நிலைநிறுத்தி நின்றோன். 6

# திருக்குறளே திருவள்ளுவர்.

நூல் இருவகை: தன் காலத்துக்கு நம்மை அழைத்துச் செல்வது ஒன்று, நம் காலத்துக்குத் தான் வந்து உதவுவது மற்றொன்று. நூலைக் கற்கும் வகையும் இருவகை: வாழும் காலத்தை மறந்து நூலெழுதிய காலத்திற்குக் கற்பனைச் சிறகு பறந்து சென்று நூற் பொருளைக் கற்பது ஒரு வகை; நூலெழுதிய காலம் எதுவாயினும் அதைவிட்டு வாழும் காலத்திற்கே வந்து வழி காட்டும் படியாக நூலைப் போற்றிக் கற்பது மற்றொரு வகை.

புலவருலகில் நின்று இலக்கிய மாகமட்டும் போற்றப்படும் நூல்கள் முதல் வகையைச் சார்ந்தவை. இரண்டாம் வகை நூல்களோ, எல்லா மக்களுக்கும் பயன் படுவனவாய், ஆட்சி புரியும் சட்ட நூல்களை விடச் செல்வாக்கு உடையனவாய், மக்களின் உள்ளங்களேகோயில்களாய்வாழ்வன. திருக்குறள், பகவத்கீதை, கன்பூஷியஸ் நூல், பைபிள் குர் ஆன் முதயலின இவ்வகையைச் சார்ந்தவை. இந்நூல்களில் எழுதிய எழுத்துக்கள் மறைந்து நிற்க, அறிவுறுத்தும் சான்றோரே முன்னிற்பர். திருக்குறளை இவ்வகையாகப் போற்றிக் கற்கக் கற்க, திருவள்ளுவர் என்னும் தமிழ்ச்சான்றோர் முன்வந்து வழிகாட்டக் காண்கின்றோம். இது பற்றியே, திருக்குறளைத் திருவள்ளுவர் என்று வழங்கும் வழக்கும் காணப்படுகின்றது.

பகவத்கீதையைப் பற்றிக் காந்தியடிகள் எழுதும் போது "இந்த நூலை மூளை கொண்டுகற்காமல் இதயம் கொண்டு உணர வேண்டும்" என்று குறித்துள்ளார். திருக்குறளையும் அவ்வாறே ஓதி உணர வேண்டும்.

—டாக்டர். மு. வரதராசன்



முற்றொடர்ச்சி

# சைவம் வளர்த்த மாது சிரோன் மணி.

ஆசிரியர்

சமயப் பிரசாரமும் பிரசங்கங்களும் இன்று மும்முரமாய் நடந்த போதிலும், நாத்தழும்பேற நாஸ்திகம் பேசுவார் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனை முழுதும் பாவக் கலியின் பண்பென மழுக்கிவிட முடியாது. வேறு காரணங்களும் உள. பழங்காலத்தில்போல் புராணக்கதைகளை எடுத்துச் சொல்லி பக்தியை உண்டு பண்ண இனி முடியாது. என்ன செயலை எடுத்தாலும் அதைச் செய்வோரின் நோக்கத்தை நுணுகி ஆராயும் மனப்பான்மை சாதாரண மக்களிடையே பரந்துள்ளது. பிரசங்கங்களில் எடுத்தாளப் படும் விஷயங்களிலும் பார்க்க பிரசாரகர்களின் வாழ்க்கையைப் பற்றிய விபரங்களிலேயே அவர்களின் கவனம் அதிகம் செல்கின்றது. ஆகையால், புகழ் விரும்பிச் சமயப்பிரசங்கங்கள் செய்வோரையும், பணம் சம்பாதிப்பதற்காகவே சமய சாஸ்திர வகுப்புகள் நடத்துவோரையுமே பெரும் பாலான சமயப் பிரசாரகர்களாய்க் காணும் போது மக்கள் மனம் திரும்பாமல் இருப்பதில் வியப்பென்ன உண்டு? பேசுபவர் மூளையிலிருந்து மாத்திரம் வருவது கேட்பவர் மூளையைச் சிறிது நேரம் தடவி வெளிச் செல்லுமேயன்றி வேறெதுவித நற்பயனையுந் தரமுடியாது. அத்தோடு நின்று விடாது. அவர்கள் செய்யும் முப்பொருள் விளக்கமும் தசகாரிய விரிவுரைகளும் கேட்போர் பலரின் நெஞ்சத்தைப் பக்தியற்ற பாலைவன மாக்கவுங் கூடும்.

வாழ்வோடு சிறிதுந்தொடர்பற்ற வெறுந்தத்துவக் குப்பைகள் நிறைந்து தலைவீக்கம் பெறுவது தான் அவர்கள் இறுதியில் கண்ட பயனுகலாம். எனவே, நாஸ்திகரின் நாச வேலைக்கு இவ்விதபோலி ஆஸ்திகப் பிரசாரகர்களின் ஆசை ஆணவம் நிறைந்த அணுவேனும் தியாகமற்ற வாழ்க்கையே பெரிதும் இன்று துணையாக உளதெனக் கூறுதல் மிகையாகாது. "தத்துவ ஞானமற்ற மதம் குருட்டு நம்பிக்கைக்கு விரைந்து செல்லுமெனில், பக்தி, ஒழுக்கம் முதலாம் மத உணர்ச்சிகளை விடுத்த தத்துவ ஞானம் வறண்ட நாஸ்திகமாய்விடுகிறது" என ஓர் ஐரோப்பிய அறிஞர் கூறுகிறார்.

நாஸ்திகப் பேச்சு நமது சமுதாயத்தைவிட்டு மறையவேண்டுமாயின், "ஞாலநின் புகழை மிகவேண்டுதென் தணிகை மாமலைமேவும் ஆதியே" என்று பரமனிடம் விண்ணப்பஞ்செய்து, அவன் புகழைப்பாடும், பேசும், எழுதும் பண்புடையவர்களே சமயப்பிரசாரஞ் செய்யவேண்டும். பக்திக்காகப் பக்தி செய்து ஞான முதிர்ச்சிபெற்ற நாயன்மார்களின், சிவபூசைக்கும் சிவபூசைக்குமிடையே வித்தியாசந் தெரியாத தியாக சீலர்களின் வாக்கே மக்களின் புறத்தே அலைந்து திரியும் மனத்தை உண்முகப்படுத்தி உயர்த்தும் பெற்றிவாய்ந்தது. அவர்களின் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் பக்தியூற்றைத் தோண்டி வெளிப்படுத்தும் ஆற்றலுடையது. இனி கி. பி. ஏழாம் நூற்றாண்டில் பாண்டிநாட்டில் சைவப்பிரசாரம் நடந்த விதத்தைச் சிறிது ஆராய்வோம்.

ஆளுடைய பிள்ளையார் திருமறைக்காட்டில் எழுந்தருளியிருந்தபோது, பாண்டி நாட்டில் சமணம் பெருகி சைவம் அருகி வரும் செய்தியை மதுரையிலிருந்து வந்த ஒற்றர் மூலம் அறிந்தனர். அங்கிருந்த அடியார்கள் அவரை உடனே பாண்டி நாட்டுக்கு எழுந்தருளுமாறு வேண்டினர். அதற்கு உடன்பட்ட பிள்ளையார் ஆலயஞ்சென்று விஷயத்தை நாவுக்கரசருக்குத் தெரிவித்தார். சமணர்களின் வஞ்சனைகளையும் கொடுந்தன்மையையும் அனுபவமூலம் அறிந்திருந்த அப்பர் கோள் நிலை நல்லாயில்லையெனக் கூறித் தடுத்தார். அதற்குப் பிள்ளையார், "நாம் போற்றுவது சிவபிரான் திருவடி; நம்மை நாள் என் செய்யும் கோள் என் செய்யும்?" என்று கோளறு பதிகம்பாடி, தம்முடன் துணையாக வரவிரும்பிய அப்பரை சோழநாட்டிலேயே தங்கி சிவத்தொண்டுசெய்யுமாறு நிறுத்தி, மறைக்காட்டுறையும் மணாளனின் அருளைப்பெற்றுப் பாண்டிநாடு நோக்கினர். செல்லும் வழியில் அகத்தியான் பள்ளி குமகர் கோயில், இடும்பாவனம், நெடுங்குன்றம் முதலாய பதிகளுக்கு அடியார்களுடன் சென்று தமிழ்மாலை சூட்டி சைவப்பிரசாரம் செய்துகொண்டு மதுரை சேர்ந்தார்.

"ஆலவாயாவதும் இதுவே" என்று பாடிக்கொண்டே திருக்கோயிலுட்புகுந்த கவுணியர் பெருமானை, முன்னரேயே அங்கு சென்று அடக்கமாய் ஒதுங்கி நின்ற பாண்டிமாதேவியார் சந்தித்து வந்தித்த முறையை படிப்போர் கேட்போர் உளத்தை உருக்கும்



விதத்தில் சேக்கிழார் விபரித்துள்ளார். "யானும் என்பதியுஞ் செய்த தவமென்கொல்" எனக்கூறிய அம்மையாரைப்பார்த்து பிள்ளையார் "சமண்சாய்த்துச் சைவம் தழைக்கச் செய்யவந்துள்ளேன்" என்று தற்பெருமைத் தம்பட்டம் அடிக்கவில்லை. "சூழுமாகிய பரசமயத்திடைத் தொண்டு வாழு நிலைமையீர், உமைக் காண வந்தனம்" என்றார். என்ன அடக்கம்! பின்னர் மதுரையில் நடக்கப்போகும் அற்புத நிகழ்ச்சிகளுக்கெல்லாம் தாம் ஓர் கருவியேயன்றி கர்த்தாவல்ல வென்ற உண்மைக்கு இது ஓர் முன்னுரையாகவும் அமைந்ததெனலாம். அத்தோடு, "முன் செய்த பெருந்தவம் தான் என்னை கொல்லோ?" என அரசியார் கேட்ட கேள்விக்கு, 'முன்னைத் தவமின்றி நீர் இம்மையே செய்யும் பெருந்தவம் இது' என்ற விடையும் அருமையாக அமைந்திருப்பதை உற்றுநோக்குக. பாண்டியன் அரண்மனைக்குச்சென்று சமணருடன் வாது செய்யுமுன் அடிகள் சிவபெருமான் திருவுள்ளக் குறிப்பை இரு பதிகங்கள் பாடி உணர்ந்து கொண்டதையும் இங்கு கவனிக்குக.

மதுரையில் பிள்ளையார் எழுந்தருளியிருந்த மடத்தில் சமணர் தீவைத்தது, அதன் காரணமாக பாண்டியன் சுரத்தால் பீடிக்கப்பட்டது, சமணரால் நோய் தீராமையால் அரசன் அடிகளிடம் அடைக்கலம் புகுந்தது, அனல்வாதம் புனல்வாதம் செய்து சமணரை வென்றது முதலாய சம்பவங்கள் வாசகர்கள் நன்கறிந்த விஷயங்களானபடியால், அவற்றை இங்கு விபரித்தல் அவசியமன்று. சம்பந்தப்பெருமானின் சைவப்பிரசாரம் மதுரையுடன் முடிந்துவிடவில்லை. அரசன் விபூதிபெற்று அன்புடன் பூசவே பாண்டிநாடு முழுவதும் திருநீறு மயமாயிற்று. பின்னர், அரசன், அரசி அமைச்சர் மூவருங் கூடிவர, ஏனை மதுரை அடியார் கூட்டம் புடைசூழ பிள்ளையார் திருப்பரங்குன்றம், திருப்புத்தூர், திருக்கானப்பேர், திருச்சுழியல், திருக்குற்றாலம், திருநெல்வேலி முதலிய திருப்பதிகளைத் தரிசித்துப் பதிகம் பாடி இராமேசுரம் அடைந்தனர். அங்கு தங்கியபோதுதான் ஈழநாட்டுச் சிவஸ்தலங்களான திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் இரண்டின் திக்கு நோக்கி வணங்கிப் பதிகம் பாடியதாகும்

சேதுவின்கட் செங்கண்மால் பூசைசெய்த
    சிவபெருமான் தனைப்பாடிப் பணிந்து போந்து
காதலுடனந் நகரிலினிது மேவிக்
    கண்ணுதலான் திருத்தொண் டரானார்க் கெல்லாங்
கோதில் புகழ்ப் பாண்டிமாதேவியார் மெய்க்
    குலச்சிறையார் குறைவறுத்துப் போற்றிச்செல்ல
நாதர் தமை நாடோறும் வணங்கியேத்தி
    நளிர் வேலைக் கரையினயந் திருந்தாரன்றே

❖ ❖ ❖ ❖ ❖ ❖

அந் நகரிலமர்ந்தங் கணினிது மேவி
    யாழிபு டைசூழ்ந் தொலிக்கு மீழந் தன்னின்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
    மழவிடையார் தமைப் போற்றி வணங்கிப் பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்திற்
    திருக்கேதீச்சரத் தண்ணல் செய்யபாதம்
உன்னி மிகப்பணிந் தேத்தி யன்பரோடு
    முலவாத கிழிபெற்றுருவகை யுற்றார்.

என்பவை அதை விபரிக்கும் சேக்கிழார் பாடல்கள். 'காதலுடன் இனிது மேவி' 'நயந்திருந்தார்' 'உவகையுற்றார்' என்ற சொற்றொடர்களை நன்கு சிந்திக்குக. முன்னர் இராமபிரான் பழிதீர்ந்தபதியானபடியால், பாண்டியன் பொருட்டு அங்குவிரும்பிச் சென்றாரென்பதையும், ஈழநாட்டுத் தலங்களைப்பாடி அந்நாட்டுமக்களுக்கும் உய்வழிகாட்டுங் கருணை காரணமாக சிலநாட்கள் தங்கியருளினாரென்பதையும் அச்சொற்றொடர்கள் அழகாக விளக்குகின்றன. எனவே, நாமெல்லோரும் பெருமைகொள்ளக்கூடிய முறையில், தென்னர் குலப்பழிதீர்த்த தெய்வப்பாவையின் சரித்திரத்தில் ஈழநாடும் இடம்பெற்றுள்ளது. அடுத்த கட்டுரையில் அன்னாரின் குருபக்தியை விரிவாய் ஆராய்வோம்.



# திருவள்ளுவர் திருநாள்.

(ஆசிரியர் குறிப்பு)

ஆதிமக்களாந் தமிழரின் நாகரீகக் கண்ணாடி திருக்குறள் அதுவே அவர்களின் அகப்புறவாழ்வின் விளக்கம்; அவர்களின் மொழியின் பழமைக்கும் புதுமைக்கும் அகச்சான்றுஅது; தமிழ் மணம் வீசாத இடங்களிற்கூட திருக்குறளின் மணம் வீசுகின்றது தமிழர்கள் தந்தாய்மொழியாகிய தமிழைக்கற்று அதன் மூலம் குறளை அறிகிறார்கள், அந்நிய நாட்டினரோ குறள் பொருளை மொழிபெயர்ப்பு நூல்களில் படித்து, அதன் மூலம் தமிழையும் அதன் பெருமையையும் அறிகிறார்கள். ஆகையால், தமிழைக் காட்டிலும் குறளுக்கே வியாபகம் பன்மடங்கெனலாம். இந்த முப்பாலாந் தாய்ப்பாலைப் பருகிய பழந்தமிழர் நல்வாழ்வு வாழ்ந்தனர்.

வள்ளுவர் ஓர் சத்திய சுத்த சமரச நித்திய சித்தர்; உலகில் மனிதன் இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்தி இன்பந் துய்த்து தெய்வத்தன்மையையடைவதற்குரிய மார்க்கத்தை வாழ்ந்து காட்டிய இல்லற ஞானி. எல்லா மதத்தினரும் அவரது கொள்கைகளை ஏற்றுக்கொள்கின்றனர். காந்தீயம் என்ற பேருடன் தோன்றியுள்ள புதிய புனித இயக்கம் வள்ளுவர் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டதேயாம். காந்தியடிகள் தென்னாபிரிக்காவில் ஆரம்பித்த சாத்வீகப் போரின் லட்சியத்திற்கு உறுதி கொடுத்த மணிவாக்கு "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால், என்ன பயத்ததோ சால்பு?" என்ற குறட்பாவென்பதை இங்கு வாசகர்கட்கு நினைவூட்ட விரும்புகின்றோம். நாஸ்திக வாதிகள்கூட இன்று வள்ளுவர் வாக்குக்கு நன்மதிப்புக் கொடுக்கின்றனரென்றால், அவர் மகிமை சொல்லுந்தரத்ததோ? இந்த மனப்பான்மையைக் காணும்போது, ஈராயிரம் வருஷங்கட்குமுன் மதுரைத்தமிழ் நாகனார், "எல்லாப்பொருளும் இதன்பாலுள. இதன்பால், இல்லாத எப்பொருளுமில்லை"யெனப்பாடியது நினைவுக்கு வராமலிருக்க முடியுமா?

வள்ளுவர்காலம், பிறப்பு, சாதி, சமயம் முதலானவற்றைப் பற்றிய பரம்பரைக் கதைகள் அநேகம். அவற்றைக் குறித்து ஆராய்ச்சியாளர் கண்டமுடிபுகளும் பல கி. மு. 75ம் ஆண்டில் வைகாசி விசாகத்தில் பிறந்தார். கி. பி. 36ம் ஆண்டில் மாசி உத்த

ரத்தில் பரகதியடைந்தார் என்பதே இன்றுவரையில் பலர் ஏற்று வந்த உண்மை. விசாக நட்சத்திரம் அவரது ஜென்ம நாளாகக் கொண்டாடப்பட்டு வந்ததற்கும், பின்னர் அதனை அதற்கு அடுத்தநாளாகிய அனுஷத்திற்கு மாற்றியதற்கும் காரணங்கள் உள. விரிவஞ்சி அவற்றை விட்டு முன் செல்வோம். தமிழர் என்ற சாதி இம்மண்ணுலகை விட்டு முற்றாய் மறைந்தபோதிலுங்கூட திருக்குறளின் பிரதி ஒன்று எங்காவது ஒரு மூலையில் இருக்கும் வரைக்கும், வள்ளுவர் பெருமான் மாந்தர் உள்ளத்தில் நித்திய சித்தராய் வதியவேசெய்வார். அத்தோடு பழந்தமிழனின் பண்பாடும் நாகரீகமும் நிலவுமென்பதும் நிச்சயம்.

திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுவதின் முக்கிய நோக்கம் அவரது வாழ்க்கையிலும் வாக்கிலும் நாம் பிறவி எடுப்பதே என்பதை மறந்து விடக்கூடாது: அப்படிச் செய்வதற்கு எந்நாளும் பொன்னாளேயாம். தமிழர் இனத்தைப்பொறுத்தமட்டில் தினம் ஒரு குறட்பாவையாவது சிந்தியாவிடின் அந்த நாள் அவர்கட்குப் பிறவாநாளேயாகும். நிற்க, எல்லாரதும் கவனத்தையும் கருத்தையும் ஈர்க்குமுறையில் ஒரு நாளைச் சிறப்பாகக் கொண்டாடுவது நற்பயனளிக்குமென்பதில் ஐயமில்லை. அவ்வித விழாவிற்கு பெரும்பாலார் ஏற்றுக்கொண்ட வைகாசி அனுஷமே பொருந்தியதெனலாம். மாசி உத்தரத்தை வள்ளுவர் பரகதியடைந்த நாளாகப் பாவிப்பதில் குற்றமொன்றுமில்லை. எவ்விதம் விழா கொண்டாடப்பட வேண்டுமென்பதை சுவாமி ஸ்ரீ சித்பவானந்தர் அவர்கள் அழகாக விளக்கியுள்ளார். அவரது அரிய அறிவுரையை பிறிதோரிடத்தில் காண்க. வள்ளுவர் பேரால் எந்தக் கழகம் பொருள் திரட்டுவது, எவர் தலைமை வகிப்பது, யார் யார் மேடையில் இடம் பெறுவது, என்பவை போன்ற அற்பவிஷயங்களுக்காக எஞ்சியுள்ள சொற்ப ஆர்வத்தை வீணாக்காது சுவாமிகளின் உபதேசத்தைப் பின்பற்றுவோமாக. இலங்கைவாழ் தமிழர்கள் அதிர்ஷ்டசாலிகள். அவர்கள் விண்ணப்பம் செய்துகொள்ளாமலே வைகாசி அனுஷம் புத்தர் பெருமானின் போல் அரசாங்க விடுமுறை நாளாய்விட்டது. வைகாசி விசாகத்தை விடுமுறைநாளாக்கத் தீர்மானித்துள்ள இந்திய அரசாங்கம் அதற்கு அடுத்தநாளையும் அப்படியே செய்து தமிழ் நாட்டின் நன்றிக்கு உரித்தாகுக.

---



# வள்ளுவர் நாளைத் தேசிய விழாவாகக் கொண்டாடுங்கள்.

[சுவாமி சித்பவானந்தர்]

நாட்டின் நலத்திற்கு பொருளாதாரம் எவ்வளவு இன்றியமையாததோ அதேபோல் இன்றியமையாதது இலக்கியச் செல்வம். சாம்ராஜ்யத்தைக் கைவிட்டாலும் விடுவோம்; ஷேக்ஸ்பியரை கைவிடோம். என்பது பிரிட்டிஷ் மக்களுடைய மனப்பான்மை. கவி ஒருவனது காவியம் ஓய்வுநேரமுடைய மக்கள் பொழுதுபோக்குக்காகப் படித்து ஒருசிறு இன்பத்தைப்பெறுவதற்காக சாதனமே என்று எண்ணி விடுதல் கூடாது. பேரிலக்கியம் ஒன்று ஒரு சமுதாயத்தினரின் உள்ளமைப்பைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடியாக இருப்பதுடன் நாட்டுமக்களுக்குலக்ஷியங்களைத் தெளிவாகத் தெரிவிக்கும்தொலை நோக்கியாகவும் ஆடவர் மகளிரை ஓயாது உழைத்து முன்னேற்றுவிக்கவல்ல சங்கநாதம் ஆகவும் இருக்கிறது. இலக்கியத்தைப்போற்றி வளர்க்காத சமூகம் சீக்கிரத்தில் சோர்வுற்றுத்தேய்ந்துபோகும்.

தாய்நாட்டையும், தாய்மொழியையும், தாய் இலக்கியத்தையும் போற்றாதவன் நல்ல பிரஜையாக இருக்க முடியாது.

தமிழகத்தின் அமரச்செல்வங்களுள் தலையாயது திருக்குறள். மிக மிக உத்தம இலக்கியத்திற்கான இலக்கணங்கள் யாவும் பொருந்தியது அது என்பது யாவரும் அறிந்ததொன்று. தமிழ்நாட்டு இளைஞர் திருக்குறளில் ஊறிவளருமாறுசெய்வது அனைவருடைய கடமையாகும். தனி மனிதருடைய வாழ்வில் எழும் பிரச்னைகளுக்கும் சமுதாய வாழ்வினில் தோன்றும் சோதனைகளுக்கும் குறளில் விளக்கமும் வழியும் காண்பது சாத்தியமாகின்றது.

பண்டிகைகளும் திருவிழாக்களும் பெரிய பண்பைஇளைஞருடைய மனத்தின்கண் பதியவைப்பதற்குப் பேருதவி செய்வனவாகும். திருவள்ளுவரையும் திருக்குறளையும் தமிழகத்தின் நடுநாயகமாகவும் கலங்கரை விளக்காகவும் இருக்குமாறு செய்யவேண்டின் வள்ளுவர்நாளைச் சிறந்தமுறையில்கொண்டாடுவது அவசி

யாகின்றது. ஏதோ சில இலக்கியக்கழகங்கள் மட்டும் ஒரு சிலரைக் கூட்டி வைத்து இவ்விழாவைக் கொண்டாடினால் போதாது தமிழ் மக்கள் அனைவரும் வீடுதோறும், பள்ளிதோறும் ஒரு விழாவாக இந்நாளைக்கொண்டாடவேண்டும். வள்ளுவர் நாளை அரசாங்கத்தார் விடுமுறை நாளாகச் செய்யவில்லையே என்று ஏங்கி நிற்பது பேதமை. பொதுமக்களுடைய கருவிதான் அரசாங்கம். பேருக்கத்துடனும் பெருமுயற்சியுடனும் வள்ளுவர் நன்னாளை மக்கள் கொண்டாட ஆரம்பித்து விட்டால் அரசாங்கம் அந்நாளை விடுமுறை நாளாக்கியே தீரவேண்டியநிலைமைதானே எழுந்துவிடும், ஒரு ஊரில் பெரியவிழாவைப் பொது மக்கள் கொண்டாட ஆரம்பித்துவிட்டால் உடனே இரயில்வே நிர்வாகஸ்தர்கள் விசேஷ வண்டிகள் விடவும்பிரயாணிகளுக்கான வசதிசெய்யவும் தாமே முற்படுகின்றனரல்லவா? அப்படித்தான் அரசாங்கமும் செய்யவேண்டி வரும், பொதுமக்களின் ஊக்கத்தைக் கிளறவேண்டியதே நமது முதன் முயற்சியாகும்.

வைகாசி அனுடத்தன்று வள்ளுவர் நாளைக்கொண்டாடலாம் என்பது பலருடைய அபிப்பிராயமாய் இருந்துவருகின்றது. இவ்வாண்டு அது வைகாசி 15-ம்திகதி வியாழன் [28-5-53] அன்று அமைகின்றது. ஆனால் பள்ளிகளும் கல்லூரிகளும் அப்பொழுது விடுமுறைக்காக மூடிக்கிடக்குமாதலால் வீடுகளிலும்சபைகளிலும் ஊர்களிலும் வைகாசி அனுடத்தன்றுகொண்டாட்டங்கள் நடைபெறலாம்: பள்ளிகள் திறந்தவுடன் ஆனி அல்லது ஆடி மாதத்தில் மாணவர்கள் அதைக் கொண்டாடுமாறு ஏற்பாடுகள் செய்தல்வேண்டும். தமிழகத்திற்கு அப்பால் வேறு ராஜ்யங்களிலும் நாடுகளிலும் வாழும் தமிழ்மக்களும் ஆங்காங்கு இந்நாளைக்கொண்டாடி வருவது அவர்தம் கடமையாகும். தமிழ்நாட்டில் தோன்றித் தரணிக்கே ஒளி விளக்கான வள்ளுவர் நாளைத் தக்க முறையில், தமிழர் கொண்டாட ஆரம்பித்தால் பின்னர் தரணியிலுள்ள மாந்தரும் அதைக் கொண்டாட ஆரம்பிப்பது திண்ணமாகும்.

"வள்ளுவர் தந்த திருமறையைத் - தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளந் தெளிவுறப் போற்றுவமே - என்றும்
உத்தம ராகி ஒழுகுவமே!"

---



# கடவுளைப் பணிதலே கற்றதன் பயனும்.

(யோகி சுத்தானந்த பாரதியார்)

மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்.

நிலமிசை நீடுவாழ வழிகாட்டுகிறார் வள்ளுவர். வழி? மனக்கவலை மாறவேண்டும். கவலை ஏன்? அறியாமையால் வரும் இருவினைக்கட்டால் கவலையுண்டாம். இக்கட்டு நீங்கும் வகை? கட்டற்ற தனிமுதல், அழியாப்பொருள் ஒன்றைப்பற்றுதலே. அழியாப் பொருள் எது? கடவுள். கடவுள் எங்கே உள்ளான்? பொதுவாக எங்கும் சிறப்பாக அவரவர் உள்ளமலரிலும் எழுந்தருளியுள்ளான். உடல் கோயில், உள்ளம் சந்நிதி. இறைவன் மூர்த்தி.

உலகிற் பலமொழிகள் வழங்குகின்றன. அவற்றின் வடிவம் பல எனினும் எல்லாம் அகரவொலியையே முதன்மையாகக் கொண்டுள்ளன. வேதசாரம் ஓம்: அ, உ, ம், மூன்றும் சேர்ந்தது ஓம். அந்த ஓமிற்கும் தாய் ஒலி அகரம். ஒரு குழந்தை முதலில் பேசுவது அ...ம்...மம்...மா, பலவான ஒலிகளுக்கெல்லாம் அகரம் முதன்மையாக இருக்கிறது. அதுபோலவே, பலவான உலகிற்கெல்லாம் முதல்வன் ஆதி பகவன்,

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

ஆதிபகவன் அருளிறைவன் ஆதிஎன்றால், முதல், தொன்மை, கதிரவன், ஆதிபராசக்தி எனப்பொருளாம். பகவன் என்றமொழி அரன், அரி, அயன், குரு அருகன், புத்தன், அல்லா, பரமபிதா, யகோவா ஆகியோர் அனைவருக்கும் பொருந்திய கடவுட்பெயர். அறிவு, நிறைவு, ஆட்சி, ஆற்றல், செல்வம், வைராக்கியம் இவை பகவன் பெருமை, தான் எதனின்றும் தோன்றாதவன். அனைத்தையும் தோற்றியவன். மூலப்பழம்பொருள் – அவனே ஆதி பகவன். அவனையே "அந்தப்பரமாத்ம ஞாயிறு" [தத்ஸவிதுர் வரேண்யம்] என்று காயத்ரி மந்திரம் சிறப்பிக்கிறது, இறைவன்

இருந்தபடி யிருப்பவன்; ஆதி யாகிய தனது அருட் சக்தியால் ஐந்தொழில் புரிந்து யாங்கும், யாதுமாய் விளங்குகிறான். இறைவன் எண் குணத்தான்; சுயேச்சை, கட்டின்மை, இயலுணர்வு, தூய அருளுடம்பு, முற்றறிவு, எல்லாம் உடைமை, பேராற்றல் நிறையின்பம் - இவை எண் குணம். அவன் தானே தானான தனி முதல். இயற்கையை உடலாகக் கொண்டு விளங்கும்போதே அவனை வழுத்தி வணங்கவல்லோம். ஐம்பொறி யடக்கிய ஞான தீரரான குருமார்கள் மூலமும் அவன் அருள் புரிகிறான். அருவாக, அருளுருவாக, குருவாக, எவ்வகை யாகவேனும் இறைவனைப் பற்றுக! மனிதன் சிற்றறிவன்; இறைவன் முற்றறிவன். அவனடி பணிதலே கற்றதன் பயனாகும். உலக வாழ்வு, விருப்பு வெறுப்பு என்னும் இருகரை வழியே சென்று இடும்பைப் படுகிறது. விருப்பு வெறுப்பில்லாத சமநிலைக் கடவுளின் திருவடியைப் பற்றுதலே இடும்பை தீரும் வழியாம்.

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

இரவி முன் இருள் நிற்காது. இறைவன் மெய்ப்புகழ் போற்றுவாரிடம் இருள்சேர் இருவினைகள் சேரா. பொறிவாயில் ஐந்தையும் அடக்கி வென்ற குருமார்கள் மூலம் அவன் மெய்ந்நெறி காட்டுகிறான். அந்த உண்மையான வழியில் நின்றொழுகும் தூயர், கவலை, பிணி, கட்டு, துயர் முதலிய இன்றி நிலமிசை நீடு வாழ்வார். எவ்வாற்றானும் தன்னிகரற்றவன் இறைவன். அவனடிப் புகுந்தாலேதான் மனக்கவலை தீரும்.

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது.

அவன் அறக்கடல், அந்தணன், இனிய தன்மையன், எண் குணன். அவனை உணராப் பொறியும், வணங்காத் தலையும், குணமில்லை. அவனையே நினைந்து, அவனடிப் புகுந்து, அவன் புகழ் ஓதும் நல்லாரே, இருவினைக் கட்டின்றி, மனக்கவலைமாறி, மெய்வழி யறிந்து, பொய்வழி தவிர்த்து, அருட்புணை பற்றி, பிறவிப் பெருங் கடலைத் தாண்டிப் பேரின்பம் பெறுவர்.



# வள்ளுவர் அருளிய வாழ்க்கைக் கலை.

(திரு, வி. க)

அன்புவழி வாழ்க்கை வளர்தல் வேண்டும். அவ்வழி வளரும் வாழ்க்கையே பண்பும் பயனும் உடையதாகும். பண்பும் பயனுமுடைய வாழ்க்கையே ஒருகலை. அவ் வாழ்க்கைக் கலை அன்பிலே வளர்ந்து உருக்கொள்வதென்பதை மறத்தலாகாது. வாழ்க்கைக் கலையே மற்றக் கலைகளின் தாயகம்.

வாழ்க்கைக் கலையை உலகுக்கு உதவினோர் பலர். அவருள் குறிக்கத்தக்க பண்டைச் சான்றோர் ஆதிமனு, அரிஸ்ட்டாட்டல், திருவள்ளுவர் முதலியோர். ஆதிமனுநெறி செவ்வனே செழித்து வந்தது. இடை நாளில் மனு என்ற பெயரால் தோன்றிய சிலர், பழைய செந்நெறிக்குக் கேடு சூழ்ந்தனர். அவரால் பிறப்பில் உயர்வு தாழ்வு, பெண்டினம், தீண்டாமை, கண்மூடி வழக்கங்கள் முதலியன கற்பிக்கப் பெற்றன. அவை தூறுகளாய்ச் செந்நெறியை மறைத்தன. இவ்வாறு ஆதி மனுநெறி குலைந்தது. அரிஸ்டாட்டல்வழியில் பொறாமை, நாட்டாசை, சுரண்டல், இகல், போர், கொலை முதலிய கொடுமைகள் மலியலாயின. இம்மலிவால் அரிஸ்டாட்டல்வழி இரத்த ஆறாகியது. திருவள்ளுவர் நெறியோ அறத்தை அடிப்படையாகக்கொண்டது. அறத்தில்மாசுபடுதல் அரிதன்றோ? அதனால் திருவள்ளுவர் நெறி சிதைவு படவில்லை. அறத்தை அடிப்படையாகக் கொண்ட எதுவும் சிதைவுபடாது.

திருவள்ளுவர் அறத்தை "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறம்" என்றும் "அழுக்காறவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்— இழுக்கா வியன்றதறம்" என்றும் விளக்கி யுள்ளார். இஃது ஊன்றி ஊன்றியுன்னத்தக்கது. மனத்தின் முழுத்தூய்மையே அறம் என்பது திருவள்ளுவர் கருத்து.

---

முற்பக்கத் தொடர்ச்சி:

"பிறவிப் பெருங்கட னீந்துவர்; நீந்தார்
இறைவனடி சேரா தார்."

தூண் பிடித்தாடும் சிறுவரைப் போன்று இறைவன் திருவடி பற்றி வாழுதலே, எல்லாச் சமய சாரமுமாகும்.

இன்பந்தருவ திறைவன் மலரடி

# வள்ளுவர் வாசுகி இல்லற வாழ்வு.

(சு. பா.)

வள்ளுவர்-வாசுகியின் இல்லற வாழ்வு மனித சமுதாயத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாம். ஆற்றுவதாற்றி அஞ்சுவதஞ்சி, அறனிழுக்காது, அன்பும் பணிவும், அழகும் அடக்கமும், பொறுமையும் எளிமையும் பொலியும் இக்காதலர் வாழ்வு பேரின்பக் கற்பகம் போலத் தழைத்தது. கபீர் தாஸ் போல வள்ளுவர் தறி நெய்து நெய்ததை விற்று, அதில் வந்ததைக் கொண்டு சிக்கனமாக வாழ்ந்தார். "செய்யுந் தொழிலெல்லாம் சீர் தூக்கிப் பார்த்திடினே, நெய்யுந்தொழிற்கில்லை நேர்" என்கிறார் வள்ளுவர்.

வாசுகியின் அடக்கமும் பணிவும், கற்பும், பொற்பும் உலகம் எல்லாம் கொண்டாடத்தக்கன. ஒரு நாள் வள்ளுவரது இல்லறப்

---

முற்பக்கத்தொடர்ச்சி:-

மனத்துக்கண் மாசிலா அற நிலையை எய்துதற்குத் திருவள்ளுவர் வகுத்த முறைகள் போற்றுதற்குரியன. இல்வாழ்க்கை வாழ்க்கைத்துணை நலம், மக்கட்பேறு. அன்பு முதலிய அதிகார வைப்பு முறைகளை நோக்குக. அவற்றை நோக்க நோக்கத் திருவள்ளுவர் கோலிய அறநெறி புலப்படும்.

இல்வாழ்க்கையாலும், அதன் சார்புகளாலும் அன்பு எழுகிறது. அன்பு மனமாசைக் கழுவுங் கருவியாகிறது. மனமாசற்ற நிலையே அறம் என்பது. அறத்தை விளங்க வைப்பது அன்பு. இதற்கு விரிவுரை வேண்டுவதில்லை. திருவள்ளுவர் கண்ட நெறி, அன்பால் தெளிவுறும் அறத்தை அடிப்படையாகக் கொண்டது. இதை உளங்கொண்டு, திருவள்ளுவர் அருளிய வாழ்க்கைக் கலையில் ஆழ்ந்து நினைத்தால், அஃது அன்புக்கலை-அறக்கலை-என்பது உறுதிப்படும். அக்கலை உலகை ஒரு குலமாக்குந் தகைமையது என்று சொல்லவும் வேண்டுமா?

திருவள்ளுவர் கலை முப்பாலால் ஆகியது. அவை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என்பன. 'உலகம் ஒருகுலம்' என்பதற்குக் கால் கொள்ளும் இடம் காமத்துப்பால். அக்காலுக்கு உரம் அளிப்பது பொருட்பால், இரண்டையும் ஒழுங்கில் இயக்கிக் காப்பது அறத்துப்பால், மூன்றன் குறிக்கோளும் 'உலகம் ஒரு குலமாதல் வேண்டும்' என்பதே.



பெருமையைக் காணக் கொங்கணச் சித்தர் வந்தார். வரும் வழியில், அவர் ஒரு மரத்தடியில் தங்கினார். மேலே இருந்த ஒரு கொக்கின் எச்சம் சித்தர் தலைமேல் பொத்தென விழுந்தது. சித்தர் சினந்தார் 'கொக்கே! நீ சாம்பலாகக் கடவாய்' என்று சாபம் போட்டார்: அவ்வாறே நிகழ்ந்தது. தமது ஆற்றலிற் பெருமை கொண்டவராகிய கொங்கணர், வள்ளுவர் வீட்டின் முன் வந்து பிச்சை கேட்டார் வாசுகி பிச்சை கொண்டு வந்தபோது கணவன் அழைத்ததால் உடனே உள்ளே சென்று ஏவியபணிபுரிந்து வந்து பிச்சையிட்டார். தாமதித்த தற்காகச் சித்தர் சினந்தார் 'கொக்கென்று நினைத்தாயோ கொங்கணனே' என்று சுருக்குக் கொடுத்தாள் வாசுகி கொங்கணர் திகைத்துப் போனார்; சினமொழித்தார், இல்லறம் பெரிதா துறவறம் பெரிதா என்ற ஞாயத்தைத் தீர்த்துக் கொள்ளவே தாம் வந்ததையுரைத்தார். வள்ளுவர் விருந்தாளியை முகமலர்ந்து ஏற்றுச் சில நாட்கள் இருந்து ஐயந் தீர்த்துக் கொள்ளச்சொன்னார்.

சித்தர் வள்ளுவர் இல்லறத்தின் மாசற்ற பெருமையைக் கண்டு வியந்தார். கணவனும் மனைவியும் இரு கண்கள் போலப் பொருந்தியிருந்தனர்; அருந்தல், பொருந்தல், அளைந்தலில் நிறைமுறையுடன் நடந்து நோயற்று வாழ்ந்தனர்; அறவழி நின்றனர்; செலவில வந்ததைக் கொண்டு மகிழ்ந்தனர்; எளிமையும் செம்மையும் பூண்டனர்; தீவினையஞ்சினர்; நல்வினையாற்றினர், விருந்தோம்பினர்; வீண் வம்பகற்றினர்; பயனில சொல்லார்; பழி பகை கொள்ளார்; சிந்தாது சிதறாது பொருளைப் பேணுவார்; மனைவி மனைத்தக்க மாண்பினள்; கணவன் சொற் கடவாள். அவளின் பணிவைக் கண்ட கொங்கணர் வியந்தார். 'சித்தரே'! இத்தகைய கற்பும் பணிவும், அன்பும் ஆதரவுங்கொண்ட மனைவி இருந்தால், 'இல்லறமே நல்லறம்' என்றார் வள்ளுவர். கொங்கணர் இல்லறவுண்மைதெரிந்து, வள்ளுவரை வணங்கிச் சென்றார். வாசுகி உயிர் பிரிந்த நாள், வள்ளுவர் மனமுருகிப் பாடியுள்ள வெண்பாவே அக்கற்பரசியின் பெருமையைக் காலச்சிலையிற் பதிய வைத்துள்ளது.

"அடிசிற் கினியாளே, அன்புடை யாளே,
படி சொற் றவறாத பாவாய்—அடிவருடிப்
பின்றூங்கி முன்னெழும் பேதையே, போதியோ!
என்றூங்கும் என் கண் இரா?"

## ஆசிய ஜோதியின் அவதார மகிமை. [கவி மணி தே. வி.]

(புத்த ஞாயிறு புவியிலுதித்ததை தியான யோக சித்தி யால் தெரிந்த அசித முனிவர் அவரது பெற்றோருக் குரைத்த தீர்க்க தரிசனவாக்கு.)

வந்த முனிவனை மன்னன் அடிபணிந்து
ஆசன முதவி அருச்சனை செய்து
மாயையை நோக்கி மதலையை எடுத்தவன்
திருவடி வைத்திடச் செப்பினன், அவளும்
கணவன் இட்ட கட்டளை போற்றி
மைந்தனை எடுத்து வருவது கண்டு,
மாமுனி எழுந்து வணங்கி நின்று
"பொறு பொறு தாயே! பொறு" எனத் தடுத்து
"மதலாய்! நின்னடி மலரினைத் தொழுதேன்
அவனே நீயாம் ஐய மதற்கிலை.
பகவன் நீயே பரமன் நீயே
புனிதன் நீயே புராணன் நீயே
தருமன் நீயே தலைவன் நீயே
ஆதி நீயே அறவோன் நீயே
உண்மையொளியால் உள்ளிருள் போக்கி
நன்மை விளக்கும் ஞாயிறு நீயே
யானும் இன்றுன் இணையடி பணிந்து
பாரிற் பிறந்த பயனெலாம்பெற்றேன்."
'மன்னர் மன்னவ! மானிடத் தருவில்
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட் கப்பால்
ஒரு முறை மலரும் ஒண்மலர் இதுவாம்.
மலரிதன் மணமே அறிவின் மணமாய்
மனத்தின் மாசு மாற்றிடும் ஐயா!
மலரிதன் மதுவே அருளின் மதுவாய்
மன்னுயிர்க் கின்பம் வளர்த்திடும் ஐயா!!
இம்மா மகனை ஈன்றவர் போல
மாதவஞ் செய்தோர் மானிலத்துண்டோ?
ஆயினும் அரசே! அரிவாள்போலுன்
நெஞ்சினை யறுக்கும் நெடுந்துய ரொன்றிம்
மகவால் உனக்குவருவது திண்ணம்,'
'மங்கையர்க்கரசி மாயா தேவி!
வாழ்க்கையோ துன்ப மயமாம்; அதனல்,
ஏந்திய முத்தினை ஈன்றபின் இப்பி
மாண்டுமண்ணில் மறைவது போல,
இற்றைக் கேழாம் நாளில் இறவா
இன்ப வீடு நீ எய்துவது. உண்மையாம்'
என்றுரைத் தேகினனே.

[புத்த பெருமானின் திரு நாளான வைகாசி விசாகம் 27-5-53]



## திருக்குறளே! உனக்கு ஈடுண்டோ?

போலிநகை மினுக்கும்,மொழி யணங்கு பல்லோர்
　　புன்மையினல் தலைகவிழ்ந்து புழுங்கி நிற்கச்
சீலநகைத் தமிழரசி முடியிற் கோடி
　　செவ் விளம்பொற் பரிதியென ஜொலித்து நிற்கும்
கோலநகைத் திருக்குறளே! வைய மெல்லாம்
　　கொள்ளையிட்டும் எள்ளளவும் குறையா தின்னும்
மேலெழுந்து விரிந்தமுதாய் விளைந்தி லங்கும்
　　விலை மதியா நிதிக்காடே உனக்கீடுண்டோ?

அறம்பழுத்த செந்தமிழன் வாழ்ந்து வைத்த
　　அரிய சம தர்மத்தை, அன்று தொட்டே
மறம்பழுக்க, "இரந்து முயிர் வாழவேண்டின்
　　மாய்ந்தொழிக, புவிபடைத்தோன்!" என முழக்கும்
திறம்பழுத்த குறள் முரசே! மதவா தப்பேய்
　　தீண்டவொணுத் தீக்காடே! சன்மார்க் கப்பொன்
நிறம்பழுத்த தவக்கனியே! தமிழ்வான் மீது
　　நிலைபெற்ற ஒளிக்கதிரே! உனக்கீ டுண்டோ?

தன்னூனை வளர்த்திடமற் றுயிரைக் கொல்லும்
　　சதிகடிந்து, மன்னுயிரைத் தாங்கு கின்ற
தன்னுயிருக் கஞ்சாத தமிழன் பண்பை
　　ஜகமெங்கும் ஒலிபரப்பும் சக்திச் சங்கே!
தன்னகந்தை வெறியலையைச் சிதற டிக்கும்
　　தன்னடக்கத் தவமலையே! "வெறும் படிப்பால்
என்ன பயன், பேரிறைவன் இணைதொ ழாக்கால்?"
　　என,உண்மை உணர்த்துகுரு! உனக்கீ டுண்டோ?

பாயவரும் கொடும்புலியும் வணங்கி, ஏவற்
　　பணிபுரியப் பேரருளைப் பாய்ச்சு கின்ற
தாயன்புக் கற்பகமே! காதல் தேனைச்
　　சாய்த்துவிட்ட மதிக்குடமே! கவிதை யூறும்

[190ம் பக்கம் பார்க்க]

# கடவுளைக் கண்டீரோ? கண்டோம்.

(பண்டிதர் மு, கந்தையா)

கண்ணாற் காணாததை எப்படி நம்புவது? என்று கடாவுகிறார் நண்பர் ஒருவர். நல்லாய்க் கடாவட்டுமேன் கொடுக்கவா பதிலில்லை.

"எதைதயையா நீர் காணவில்லை" என்று கேட்டோம் நாம் கடவுளைக் காணவில்லை என்கிறார். உலகமறியப் பலர், "கடவுளைக் கண்டோம்" என்கிறார்கள். இவர் மட்டுங் காணவில்லை என்கிறார். இதற்குக் காரணம் வேறொன்றுமல்ல; அவர் கண்காணாயிருக்கவேண்டும். எதோ பார்ப்போம்.

உலகிலே பொருள்களை யறிதல் இரண்டுவிதமாய் நிகழ்கின்றது. கண்ணாற் பொருளை முதலிற் பார்த்துப் பின் கருத்திற் பதித்துக்கொள்வது, ஒருவகை. இது சர்வசாதாரணம். இதற்கு உதாரணமே வேண்டியதில்லை. முதலில் உள்ளத்தாற் பொருளை யுணர்ந்து பின் அதனை வெளிக்காட்சியிலும் கண்டுகொள்வது இன்னொருவகை. இக்காலத்திலேற்படும் எத்தனையோ விஞ்ஞான உண்மைகள் இப்படித்தான் இருக்கின்றன. பூமி உருண்டை என்பதுகூட இவ்வகையிற் புலப்பட்ட ஓர் உண்மை. கடவுளைக்காணும் உண்மையும் இந்தவகையிலேதான் அடங்கிக்கிடக்கின்றது.

மனிதன் தன் அந்தரங்கத்தில் கடவுளை உணர்ந்துகொண்டுதானிருக்கின்றான். மிருகத்திற்கும் மனிதனுக்கு மிடையே தோன்றும் ஒரேயொரு வேற்றுமை இந்த ஒன்றேதான். இந்த உணர்ச்சி அவனிடத்தில் வரவர அழுத்திக்கொண்டேவரும். அப்படி அழுந்திய உணர்ச்சி அனுபவமாகும். அவ்வகையிலேற்பட்ட ஒன்றே கடவுளனுபவம். கடவுளை அநுபவித்த எத்தனையோ பேரை நம் நாடு கண்டிருக்கிறது; நம்முன்னோர் கண்டிருக்கிறார்கள்; நாமும் கண்டுகொண்டுதானிருக்கின்றோம். அவர்களை "உலகிற் பெரியோர்" "பெரியாரைத் துணைக்கொள்" என்பது தமிழன் முதுமொழி. அப்பெரியார் துணையின்றி உலகம் ஒன்றுஞ் செய்ய வியலாதாம். அவர்களிடந்தான் உலகம் என்பதன்



அர்த்தமே பதிந்து கிடக்கின்றதாம். அதற்காகவன்றோ திருவள்ளுவர் அவர்களைத் தம் பெருநூலின் மூன்றும் அதிகாரத்திலே அமைத்து வர்ணிக்கின்றார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரை உலகம் போற்றுகிறது. வேறெதற்காக? நாம் உலகத்தை அறியினுஞ்சரி; கடவுளையறியினுஞ்சரி அவர்கள் துணைகொண்டே அறியவேண்டும்.

இதற்கிடையில்; ஏன் எம்மறிவில் உலகம் விளங்காதோ? என்று பகுத்தறிவு வாதிகள் யாரேனும் கேட்கலாம். எம் கண்ணிலே, எம்மறிவிலே காணும் உலகம் வேறு; அவர் அறிவிலே காணும் உலகம் வேறு. புறவுலகின் பொய்த்தன்மையை நாங்கள் காணுகிறோம் கண்ட அளவில் உலகமே தெரிந்து விட்டதாகப் பாசாங்கு செய்து கொள்கிறோம். உள்ளுலகின் உண்மைத் தன்மையைப் பெரியார் காண்கின்றார்கள் இதற்குக் காரணம் வேறெதுவுமன்று எங்கள் கண்வேறு, அவர்கள் கண்வேறு; அவ்வளவேதான். இன்னும் அவர்கள் காண்பது உலகின் இன்பப்பகுதி நாம் கண்டுகொண்டிருப்பது அதன் துன்பப்பகுதி துன்பப் பகுதியைக்கண்டு இன்பமாகப் பாவித்துக்கொள்கின்றோம் இது எம் செயலில் உள்ள ஒரு அற்புதம். தன் சுய கண்ணாலே பார்க்கின்ற மாடு வைக்கோலை விலக்கிப் புல்லைத்தேடியுண்கின்றது பச்சைக்கண்ணாடி அணிந்துகொண்ட மாடோ வறண்ட வைக்கோலைப் பசும் புல்லென்று வாலை ஆட்டி ஆட்டி அருந்தப்பார்க்கின்றது மாட்டின் கண்ணுக்குப் பச்சைக்கண்ணாடி போல எம் கண்ணுக்கும் கண்ணாடியொன்று மாட்டப்பட்டிருக்கின்றது. அது மாயைக் கண்ணாடி. அதனையே தத்துவ ரீதியில் மாயாமலம் என்கிறார்கள். உண்மையை மறைப்பது அதன் சொந்தக்குணம் இந்த மாயைக் கண்ணாடி கழன்றவர்கள்—ஞானிகள்—பெரியார்கள்

மற்றைய உலகப்பொருள்களைக் காண்பதிலும் பார்க்க, கடவுளைக் காண்டல் மிக இலகுவாயிருக்கவேண்டும். உலகப் பொருள்கள் சிலவற்றைக் குறிப்பிட்ட சில காலங்களிற்றான் காணமுடியும் சிலவற்றைக் குறிப்பிட்ட சில இடங்களில்தான் காணமுடியும் எல்லாப் பொருள்களையும் எங்கும் எப்போதுங் காண்டல்

இயலாது கடவுள்தான் "பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணமாயிற்றே" எவனும் எவ்விடத்தும் எக்காலத்துங் காணக்கூடிய இவ்வளவு இலகுவான பொருள் கடவுள் இதை நண்பர் காணவில்லை காரணம் கண்ணின் குறையா? வேறா?

தாயுமான சுவாமிகள் சிவபூசை செய்பவர்; ஒருநாள் பூசை செய்யவில்லை அந்தக் குறையைக் கடவுளிடத்தில் நேரே தெரிவித்துக்கொள்ளுகின்றார்

"பண்ணேன் உனக்கான பூசை
ஒருவடி விலே பாவித் திறைஞ்சி
ஆங்கே, பார்க்கின்ற மலரூடு நீயேஇருத்தி"

"பூசை செய்ய நினைந்தேன் பூக்கொய்யப் போயிருந்தேன் நான் பார்த்த பூவுக்குள் நீயே நிறைந்திருக்கின்றாயப்பா அதன்மேல் அப்பூவைப்பிடுங்க எனக்கு கைவரவில்லை அவ்வளவிற் பூசையையே நிறுத்திவிட்டேன்" என்கின்றார் அவர். இது அவர் தான் கண்ட அளவிலே தன் கடவுளுக்குச் சொல்லிக்கொண்டது. பூசை புரிவதே கடவுளைக் காணத்தானே. பூவுக்குள்ளே கடவுளைக் கண்டுவிட்டால் பிறகு அதைப் பிடுங்குவானேன்? இவர் தான் கண்ட அளவிலே அமைந்துவிட்டார். திருநாவுக்கரசு சுவாமிகள் இவ்வளவில் விட்டுவிடவில்லை மற்றவர்களுக்குங் காட்டுகிறார் அவருக்கு ஏற்பட்ட குதூகலம் அவ்வளவு. வேறு நாலுபேரைப் பார்க்கச்செய்வதிலே அவருக்குப் பேரானந்தம். தான் இன்புற்றால் மட்டும் போதுமா? அதைக் கண்டு உலகமும் இன்புறவேண்டுமே என்றிருந்தது சுவாமிகள் அருளுள்ளம். எதிரேவந்த சிலரைநோக்கி, சங்கரனைக் கண்டீரோ? என்று கேட்டார். நாங்கள் ஒன்றைக் காணவேணும் காணுவேனுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருக்கையில் ஒருவர் மந்து, கண்டீரோ? எனத் திடீரென வினவினால் எங்கள் பாடு எப்படியிருக்கும் காணும் ஆவல் ஒருபடி மிஞ்சிவிடுமல்லவா அடுத்தாற்போல் நீர் கண்டீரோ என்று அவரையே கேட்டுவிடுவோம் அது கேட்கும்வரை சுவாமிகள் தாமதிக்கவில்லை.

"கண்டோம்" என்று உடனேயே சொல்லிவிட்டார். மற்றவர்கள் முன்னறிந்திருந்த ஒருபொருளைக் "கண்டேன்" என்று



பெயரளவிற் சொன்னாலும் போதும். ஒருவரும் முன்பின் அறியாத ஒன்றைப் பெயரளவில் மட்டும் சொன்னால் மற்றவர் நம்புவார்களா? அதுவும் இந்தப் பகுத்தறிவுலகம் நம்பவே நம்பாது. அதன் இலட்சண மெல்லாம் சொல்லித் தானாகவேண்டும். சொன்னால் கேட்பவருக்குக் கண்டது போலிருக்க வேண்டும். சுவாமிகள் இச்சொல் வன்மையிற் சிறந்தவர். அல்லாவிட்டால் நாவுக்கரசர் என்ற பெயர் எதற்காக? அவரியல் பெல்லாஞ் சொல்லிவைக்கிறார் அவர் அணிந்து கொண்டிருப்பது கோவணம். அதுவும் தைத்துப் பொருத்திய கோவணம், மார்பிலே பூணூல் துவள்கிறது.

"சந்தித்த கோவணத்தர் வெண்ணூல் மார்பர்"

மேலும் என்ன வெள்ளை எருது வாகனம் ஒன்று; அதற்கு மூக்குக்கயிறும் ஒன்று மாட்டியிருக்கிறது. வெகு விரைவாய்ப் பாய்ந்து செல்கின்றது அது. அதன் மேல் அமர்ந்திருக்கிறார் இறைவன்.

"பந்தித்த வெள்ளிடை யைப் பாயவேறி"

இன்னும் ஒரு விஷயம் மிகச் சுவாரஸ்யமானது கையிலே ஒரு பொருள் வைத்திருக்கிறார். அது ஒரு ஓடு, தலையோடு. அதை மிகப்பத்திரமாய் ஏந்தி வைத்திருக்கின்றார். ஆதலால் உள்ளே ஏதோ இருக்கத்தான் வேண்டும். ஆனால் இன்னதென்று மட்டும் தெரியாது. சும்மா ஒன்றைச் சொல்லுதல் சுவாமிகள் வழக்கமல்ல.

"படுதலையில் என்கோல்லோ ஏந்திக் கோண்டு"

வருகின்றார் வருகின்றதோற்றம் உள்ளத்தை உருக்கின்றது. உடலையும் வாட்டுகின்றது. காதல் பெருகுகின்றது. சுருங்கச் சொன்னால் "கைவளை கழலும்" நிலை

"வந்திங்கேன் வெள்வளையுந் தாமு மெல்லாம்"

மனத்தைக் கவரும் அந்திவேளை அவரழகு அந்தியின் அழகை விழுங்குகின்றது. அந்திக்கால அமைதி, அவர் அமைதியிலே

ஒடுங்கிப்போகின்றது. திருவாரூரிலிருந்து புறப்பட்டுவந்து கொண்டிருக்கின்றார்.

"மணியாரூர் நின்றந்திக் கொள்ளக் கொள்ள"

மிகப்பருத்த உருவமுடையார் சிலர்பந்தந்தாங்கி வருகின்றார்கள் பந்தங்கள் பொன்னொளிபோற் கொழுந்து விட்டெரிகின்றன.

"பொன்தீ மணிவிளக்குப் பூதம்பற்ற"

இவ்வளவு ஆடம்பரத்தோடு இவர் இந்த நேரத்தில் எங்கேபோகிறார்? ஆருக்கேனும் இந்த எண்ணம் எழுவது இயல்புதானே. சிதம்பரம் போகின்றார்.

"புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார்தாமே"

இனி எல்லா அடிகளையும் ஒன்றுகூட்டிப் பார்ப்போம்

"சந்தித்த கோவணத்தர் வெண்ணூன் மார்பர்
சங்கரனைக் கண்டீரோ கண்டோமிந்நாள்
பந்தித்த வெள்விடையைப் பாயவேறிப்
படுதலை யிலென்கொலோ வேந்திக் கொண்டு
வந்திங்கென் வெள்வளையுந் தாமும் எல்லாம்
மணியாரூர் நின்றந்திக் கொள்ளக் கொள்ளப்
பொன்தீமணி விளக்குப் பூதம் பற்றப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே"

---

185 ம்பக்கத் தொடர்ச்சி

வாய்மழலைக் கனியமுதே! வாய்மைக் குன்றில்
வடித்தெடுத்த பொற்சிலையே! வள்ளு வன்தம்
தூயமனப் பொய்கையிலே பூத் தெழுந்த
ஜோதிமணத் தாமரையே! உனக்கீ டுண்டோ?

மடமையிருட் புன்மையெலாம் களைந்தே நீந்து
மாசறுநல் ஒழுக்கத்தால் அறம் வளர்த்து
கடமையிலே வழுவாநற் பொருள் விளைத்து
கருத்தொன்றிக் கலக்கும் இன்பக் காதல் துய்த்துத்
திடமாகப் புவிவாழும் நெறி யளித்த
தென்னுதமிழ்ப் பொதுமறையே! கால மென்னும்
கடல்கடந்து தமிழ்த்தாயின் புகழ் பரப்பக்
கலைக்கோயி லாய் எழுந்தாய் உனக்கீ டுண்டோ?

பரமஹம்ஸ தாஸன்



# மெய்ஞ்ஞானத்திற்கு மார்க்கம்.

தென்னுப்பிரிக்கா டர்பன் திரு. ச. மு பிள்ளை அவர்கள்

மகா புருஷர்கள், மகாத்மாக்கள், மெய்ஞ்ஞானிகள், உத்தமர்கள் என்று பலவாறுகச் சொல்லுகிறோம். இத்தன்மைகள் வாய்ந்த மகா புருஷர்களின் விசேஷ யோக்கியதாம்சங்கள் எவை? தீர்க்கமாகச் சிந்தனை செய்து நல்ல காரியம் இது என்று தெரிந்துகொண்டு, அந்த காரியத்தை அனுஷ்டானத்தில் கடைப்பிடிப்பவர்களே மகா புருஷர்கள் எனப்படுவார்கள்.

நேர்மையாகச் சிந்தனை செய்வதென்றால் என்ன? மனதைத் தீதற்ற பாவமற்ற பான்மையில் வைத்திருந்து சிந்தனை செய்வதே நேர்மையான சிந்தனையாகும். பாவம் என்பதென்ன? இவ்வுலகில் நசித்துப் போகவல்லவை டனைத்தும் பாவங்களே. அப்படிப்பட்ட விஷயங்களில் நம்பிக்கை வைத்து சிந்தனை செய்வது நேர்மையற்ற காரியமாகும்.

எவர் எவர் இந்த ஜன்மத்தில் துன்பம், சாவு இவற்றிற்கு அஞ்சாமல் அக் கடல்களை தாண்டி அக்கரை அடைந்து விட்டார்களோ அவர்களே வீரர்களெனப்படுவர் அப்படிப் பட்டவர்களையும் விட உயர்ந்த வீரர்கள் உண்டு. அவர்கள் யார்? எப்படிப்பட்டவர்கள்? இந்தப் பிறவியில் ஞான ஒளி யில்லாமல், இருளில் புழு நெளிவது போல் நெளிந்து கொண்டிருக்கும் மக்களுக்கு நந்தா விளக்கை ஏற்றி வைக்கிறார்களே அவர்களே யாவர். நமது சங்கராச்சாரியார் சுவாமிகள் அப்படிப்பட்ட மகா வீரர்களில் ஒருவர்.

இளம் பிராயம் வாய்ந்த சிறுவன் சனாதன தருமத்தை ஆதரிப்பவன். ஒழுக்கமும் பண்பாடும் மிகுந்த உள்ளத்தான். அந்த உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்துப் பெருக்கும் கவிவாணன். தர்க்கம் வியாகரணம் இவைகளை நெறி தவறுமல் பின்பற்றிய தத்துவ ஞானி. கல்வி கேள்விகளில் பயின்று கடல்போல் ஞானத்தைப் பெற்றவன். யோகாப்பியாசங்கள் தேர்ந்த முனிவன். சமயாசார சீர்திருத்தத்தில் முதல் அணியில் நின்றவன். இது சங்க

ரர் சித்திரம். இப்படிப்பட்ட குணாதிசயங்களனைத்தும் ஒருமிக்க ஒரு மனிதனிடம் சேர்ந்திருந்தன. அந்த மனிதன் உள்ளத்தின் உள்ளே இருக்கும் வாயினாலும், சொற்களினாலும் விவரித்துக் கூறமுடியாத ஆத்மாவின் எண்ணங்களைப்பளிச்சென்று விண்டு காட்டினான். அப்படிப்பட்ட சங்கரர் சுடரடிபணிந்தால் நாமும் அவருடைய அறிவில் பங்கு பெற்று உய்வோம்.

மக்கள் அனுஷ்டிக்க வேண்டிய வழியைக் குறித்து மாத்திரம், புத்தர் பிரான் வற்புறுத்திக் கூறினார், ஆனால் ஸ்ரீ சங்கரர் வழியையும் வகுத்தார் லட்சியத்தையும் காட்டினார். உள்ளத்திலுள்ள இச்சைகளை மாய்த்தால், ராஜஸ, தாமஸ குணங்களை அடக்கி, வெற்றி பெறலாம். அதனால் பிரும்ம சாக்ஷாத்காரம் அல்லது அந்தராத்ம ஞானம் ஏற்படும். நிரந்தரமான, நித்தியமான பரம்பொருளை தரிசிப்பதுவே ஒவ்வொரு மானிடப் பிறவிக்கும் விமோசனமாகும். அழிவில்லாத ஆனந்தமயக் காட்சியைக் காண்பதே ஜென்ம ஸாபல்யம்.

பெரிய பெரிய விஷயங்களைக் குறித்து சௌடால் அடித்துப் பேசுவதானாலும், சாக்குப் போக்குகள் சொல்லி மனிப்புகள் கேட்பதனாலும், தந்திரத்தினாலும் நித்தியானந்த நிலையை எய்திவிட முடியாது. மனப் பூர்வமாக இச்சைகளைத் துறக்க வேண்டும். அகம் என்பது துளியும் இல்லாமல் சூன்யமாக்கிவிட வேண்டும்; நான் என்பதை அடியோடு அழித்துவிடுதல்மூலம் பொய் வாழ்வை நிஜ வாழ்வாக்க வேண்டும், பக்தியும்; யோகத்தின யம நியமங்களை வழுவாமல் கடைப்பிடிப்பதும் மெஞ்ஞான பிராப்தத்திற்கு இன்றியமையாத அனுஷ்டானங்கள்.

மெஞ்ஞான ஆராய்ச்சி சாதகர்கள் இவ்வுலகில் எவ்வாறு வாழவேண்டுமென்பதை சங்கரர் எளிய முறையில் தெரிவித்திருக்கிறார், கடல் போல் பரந்து, ஆகாயமளாவும் உயர்ந்த சிந்தனைகள் ஆனால் எளிய வாழ்வு. இவைதான் சாதகர்கள் கடைப்பிடித்தொழுக வேண்டியமுறை என்று கூறினார். அப்பா! எவ்வளவு புகழ்மிக்க வாழ்க்கை! ஸ்ரீ சங்கரர் இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்து காட்டினார். இந்த உலகத்தில் தன்னுடையது என்று சொல்ல அவருக்கு ஒன்றுமில்லை. அவர் பிறவி தொட்டு பரமஹம்ஸ பரிவிராஜகர்; பால சன்யாசி,



இந்த உலகத்தில் யாரும் ஏழை என்று துக்கப்படவேண்டியதில்லை; யாரும் பாவி என்று கிலேசப்பட வேண்டியதில்லை; யாரும் கண்ணீர் விட வேண்டியதில்லை; மனிதன் ஒவ்வொருவரும் பரமாத்மாவின் சொரூபம். எல்லா ஜீவன்களிலுமிருப்பது ஆத்மா அந்த ஆத்மாவை தன் இருப்பிடமாகக் கொண்டவர் பரமாத்மா.

அச்சமில்லையடா மானிடா! ஆசையும் இச்சையும் இல்லாத இடத்தில் அச்சமும் இல்லை. அச்சமில்லை காண்! நீ ஆடு என்ற நினைவோ? அது பொய்! நீ சிங்கம் என்பதை உணர்ந்து வாழ்வாயாக! நீ பாவி என்று பரதவித்தாயோ! அது பொய் என்று கண்டு தேர்ந்திடுவாய். நீ தெய்வாம்சம் என்பதை உணர்ந்திடுவாய் அச்சத்தைப் புழுதி செய்திடு. உள்ளத்தில் தெய்வீக சக்தியை கிளப்பி விடுவாய், அழிவற்ற, சாவற்ற, அறிவு, அமைதி, தூய்மை இவை குணங்களை வளர்த்திடுவாய்,

காலமெல்லாம் பஞ்சையாய், கோழையாய் இருந்ததெல்லாம் போதும்! முட்டாளாக வாழ்ந்ததெல்லாம் போதும்; போதும்! வீரனே! சத்தியம் என்னும் போர் கவசத்தை பூணு! தள்ளாடி நடக்காதே! நிமிர்ந்து நட! ஒளி இசை நோக்கி நட! ஞான ஒளி பெறுவாய். அஞ்ஞான இருள் தொலைந்து போகும். இவை ஸ்ரீ சங்கரர் செய்த உபதேசங்கள். இவ்வாறு சங்கரர் சொன்ன உபதேசங்களை செவியில் வாங்கி, கருத்தில் வைத்து சிந்தனை செய்து அனுஷ்டானத்தில் கொள்வோமாகில், இந்த உலகில் மக்களுக்குத் துன்பமில்லை; ஜெயமுண்டு. ஆகவே எழுந்து நில்லடா!

இந்த உலகத்தில் மக்கள் எவ்வளவு காலம் இச்சை வசப்படாத மனதுடனிருந்து சிந்தனை செய்யவில்லையோ, அவ்வளவு காலம் துன்பம் நீங்காது; துயரம் குறையாது, நியாயம், சத்தியம், நேர்மை, ஒழுக்கம் இவைகளை எல்லாம் புத்தி சாதுர்யத்தினால் ஸ்தாபித்து விட முடியாது. இச்சையற்ற வாழ்க்கையின் பயனாகவே ஸ்தாபிக்கமுடியும். மனிதனுடைய உள்ளத்தில் சுயநலமும், ஆசையும், பாசமும் இருந்துவிட்டால், அவனால் நல்ல விஷயங்களைக் குறித்து சிந்திக்கவே முடியாது.

ஸ்ரீசங்கரர் வேதங்கள், உபநிஷதங்கள் சுருதிகள் இவைகளை அனுசரித்து நியாயத்தையும் ஒழுக்கத்தையும் தீர்மானித்துக்கொள்ளச் சொன்னார். இறைவனை மனதில் எண்ணி எது தருமத்திற்கு விரோதமற்றதென்று தெரிந்தால் அந்தகாரியத்தைச்செய் என்று சொன்னார். அப்படிப்பட்ட காரியம் மனிதனுடைய புத்தி சாலித்தனம், சாமார்த்தியம் இவைகளுக்கு ஒவ்வாதவாறு இருப்பினும் கவலை இல்லை என்று கூறியுள்ளார். இதனையறிந்து ஸ்ரீ சங்கரர் ஆசியை நாம்பெறுவதற்கு லாயக்குள்ளவர்களாவோமாக,

# திவ்ய ஜீவன சங்கம்

## சிவானந்த தபோவனம் திரிகோணமலை

## நோக்கங்களும் பணிகளும்

ஆன்ம நேய அன்பர்களே!

இறைவன் திருவருளும் சற்குரு சிவானந்த மகரிஷிகளின் ஆசியும் மெய்யன்பர்களின் பேருதவியும் துணையெனக்கொண்டு தொண்டாற்ற முன்வந்துள்ளது இச்சங்கம்,

இது உங்கள் சங்கம்,

இந்தச் சங்கம் தனிப்பட்ட ஒருவருடைய உரிமையல்ல. எவருடைய சொந்தநலன் குறித்தும் ஏற்பட்டதல்ல ஆன்மிய நெறியில் இகம்பரம் இரண்டிலும் நல்வாழ்வு வாழ விரும்பும் ஆண் பெண் அனைவருக்கும் பொது. ஜாதி, மத, நாடு, நிறவேற்றுமைகள் சிறிதும் இங்கு தலைகாட்டா

இது ஈஸ்வர சேவை,

கழகத்தின் அலுவலனைத்தும் இறைவன் வழிபாடேயாம் ஏழைகள், நோயாளிகள், திக்கற்றவர்கள், சமூகக்கொடுமையால் தாழ்த்தப்பட்டோர் ஆகிய அனைவர்பாலும் இறைவனையே கண்டு அவர்களுக்குப் பணிசெய்யும் வாயிலாகவும் நடமாடுங் கோயில் நம்பர்க்குப் பூசனைபுரியும்

இது சாந்தியளிக்கும் சுவர்க்கம்,

இங்கு அனைவர்க்கும் நல்வரவே, எல்லோரும் உடல்; நலம் உள நலம், உயிர் நலம், பெறலாம். வாழ்க்கையின் குறிக்கோளாகிய ஆத்ம சாட் சாத்காரம் அடையலாம் ஒவ்வொருவர் பாலும் மறைந்துள்ள அரும்பெரும் சக்திகளை வெளிக்கொணர்ந்து வாழ்க்கையில் இன்புறலாம்

இதன் வேலைப் பகுதிகள்,

ஆஸ்ரமம் ஆர்வமுள்ள சாதகர்கள் தங்கள் தனிப்பட்ட சாதனைகளுக்காகச் சிறு சிறு குடில்களில் இருந்து தங்களுக்கேற்ற



யோகமுறைகளில் பயில்வார்கள் இதனை மய்யமாகக்கொண்டு மற்ற பகுதிகளின் அலுவல்களனைத்தும் நடைபெறும்

இலவச வைத்தியசாலை நோயாளிகளின் மனம், உடல் வயது, நோய் நிலைகளுக்கேற்பத்துதி சிகிச்சை, யோகசிகிச்சை இயற்கைச் சிகிச்சை, தீங்கற்ற மருந்துச் சிகிச்சைகளின் மூலம் குணமளித்தும், ஆலோசனை கூறியும் உதவும், இவையனைத்தும் குறிப்பாக 'யோகிராஜ்' ஸ்ரீ சச்சிதானந்த ஸ்வாமிகளின் மேற்பார்வையில் நடைபெறும். நோயாளிகளிலேயே பகவானை தரிசித்து அவருக்கு சேவை செய்து அன்பு செலுத்தும் வாயிலாக சாதகர்களுக்குக் கர்மயோகதத்துவத்தை அனுபவத்தில் கொண்டுவர இப்பகுதி நன்குதவும்.

கல்வி நிலையம் சிறுவர் சிறுமியருக்கும் பிறர்க்கும் எண்ணெழுத்துக்கல்வியும் தொழிற் கல்வியும் அளிக்கும். சமஸ்கிருத தமிழ்மறைகளும் சாஸ்திரங்களும் போதிக்கும் வேதபாடசாலையொன்றும் இதிற் பாகம் பெறும்.

அனாதையில்லம் உயிர்களனைத்தும் இறைவனது குழந்தைகள், அவர்களில் அனாதைகளென்பது என்றும் இல்லையெனினும் சகோதர மக்களால் கைவிடப்பட்டு நிர்க்கதியானோமென்று எண்ணித் தவிக்கும் சகோதர ஜீவன்களை இவ்வில்லம் எடுத்தணைத்து ஆவனசெய்யும்.

இன்னும் நூல்களும் சஞ்சிகைகளும் வெளியிடும் பதிப்பகமும், நூல் நிலையமும், பசு நிலையமும், போன்ற பல பகுதிகளும் இச்சங்கத்தில் இடம் பெறும்.

இதில் உங்கள் பொறுப்பு

உங்கள் நலங்களை உத்தேசித்து உழைக்கும் இச்சங்கத்தில் நீங்கள் அங்கத்தினராகலாம் உற்றார் உறவினரையும் அங்கத்தினராக்கலாம், உங்கள் சக்திக்கேற்றவாறு உடலாலும், பொருளாலும், வாக்காலும் மனதாலும், உதவலாம். இதன் முன்னேற்றத்துக்கு வேண்டிய அபிப்பிராயங்களை தெரிவிக்கலாம் மொத்தத்தில் சங்கத்தின் நோக்கங்கள் நிறைவேற எல்லாவகையாலும் உதவிசெய்து இறைவன் திருவருளுக்குப் பாத்திராக வேண்டுகின்றனம்.

# செய்தித்திரட்டு

## திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூஜை

இடம்: பதுளைச் சைவபரிபாலன சங்கம்
பேச்சாளர்: திரு. க. இராமச்சந்திரன்

இடம்: நாவலப்பிட்டி இந்துவாலிப சங்கம்
பேச்சாளர்: திரு. க. இராமச்சந்திரன்

இடம்: கேக்கிராவை சைவபரிபாலனசபை
பேச்சாளர்: திரு. எஸ். மாணிக்கவாசகர்

இடம்: பசுமலை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்
பேச்சாளர்: திரு. நா, முத்தையா

## துறவின் பெருமை

கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணியசுவாமி கோவிலிலே ஐந்து ஆண்டுகளாக கூட்டுப்பிரார்த்தனை ஞாயிறுதோறும் நடைபெற்று வந்தமை யாவரும் அறிந்ததே, ஐந்து ஆண்டு பிரார்த்தனையின் பலனாக ஒரு துறவியைச் சிருஷ்டித்து மதுரை திருஞானசம்பந்த மடத்துத் தலைவராக அனுப்பிவைத்தமை ஈழத்துத் தமிழர்களுக்குப் பெருமைதருவதோர் விஷயமாகும் அத்துறவியார்தாம் திரு, K. V சோமசுந்தரம் அவர்கள் அவரைக் கருவியாகக் கொண்டு "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" எனப் பிரார்த்திக்கின்றோம்.

## கொழும்பில் இந்துக்கல்லூரி

கோயில்கள் சிறப்புற்றிருந்த காலத்திலே கல்வியையும் ஒழுக்கத்தையும் ஆத்மீகத்தையும் கோயில்களே வளர்த்துவந்தன இடைக்காலத்திலே கோயில்கள் தமது கடமையினின்று வழுவிவிட்டன. அத்தொண்டை சமயப்பாடசாலைகள் மூலமே செய்ய முடியுமென்பதை இப்போதுதான் தமிழர்கள் உணர்ந்திருக்கிறார்கள். கொழும்புத் தமிழரின் உணர்ச்சி 30 லட்சம் ரூபாவில் ஒரு கலைக்கோயிலாகத் திகழப்போவதை யறிந்து எந்தத் தமிழ் மகனும் மகிழாமலிருக்க முடியாது. இதே உணர்ச்சி ஈழமெங்கும் பரவி ஆயிரக்கணக்கான இந்துக்கல்லூரிகள் நிலைபெற வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

---

ஓம்

# குறள் வணக்கம்

அகர எழுத்தேபோல் அனைத்துலகும் படைத்த ஆதிபகவனே! எங்கள் முதற் தேவே!

நூலறிவு மிகப்பெற்று வாலறிவன் உனையுற்று நாங்கள் உங்கள் நற்றாள் தொழப் பணிப்பாயாக.

அன்பர்தம் மனமெனும் மலர்மிசை ஏறிய உன் மாணடி சேர்ந்து நிலமிசை நீடுவாழ அருள் புரிக.

வேண்டுதல் வேண்டாமை யின்றிய உம் திருவடி தொழுது யாங்கள் யாண்டும் இடும்பையின்றி இருக்கச்செய்க.

பொருள்சேர் புகழ்மிக்க இறைவ! எங்கள்பால் இருள்சேர் இருவினையும் சேராமற் கா.

பொறிவாயில் ஐந்தவித்த பண்ணியனே உமது பொய்தீர் ஒழுக்கநெறிநின்று நீடுவாழக் கருணைபுரி.

உனக்குவமை யாருண்டு! உன்தாளடைந்து எம் மனக்கவலை மாற்றவருள்.

அறவாழி அந்தண! தூயநின்தாள் துணையெனக் கண்டோம் அதைத்தாழ்ந்து வணங்கத் தலைதந்து யாம் பிறவாழி நீந்தத் துணை வா.

எண் குணனே! எம்மிறைவ! நினது பேரருளாலும் குணமென்னும் குன்றேறி நின்ற நிறைமொழி மாந்தராம் ஒழுக்கத்து நீத்த அறவோர்தம் ஆசிகளாலும் இவ்வுலக மக்கள் மனத்துக்கண் மாசிலராகிச் சிறப்பும் செல்வமும் ஈனும் அறத்தின் ஆக்கம்பெற்று இசைபட வாழ்க.

கானந் தவிராண்டும் தங்கத்துணை புரியும் வானப்புயலென்னும் வாரிவளம் பெருகிச் சிறப்பொடு பூசனைகளும் பசும் புற்றலைகளும் நிறைந்து வியனுலகத்துண்ணின் றுடற்றும் பசி ஒழிக.

எம்மனைவருடைய உயிர்நிலைகளும் அன்பின் வழியாக இருந்து, எங்கள் என்பும் பிறர்க்குரியதாகி, அருள்சேர்ந்த நெஞ்சும், உயிர்செகுத் துண்ணாத நாவும், பிறன்பொருளைக் கள்ளத்தாற் கொள்ளாத உள்ளமும், யாதொன்றும் தீமையிலாது சொலும் வாய்மையும் பெற்று; எம்முயிர் நீப்பினும் யாம் பிறிதின்னுயிர் நீக்கா வினைபுரிந்து, யாண்டும் ஒப்பில்லாத வேண்டாமையன்ன விழுச் செல்வமும், எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காணும் அறிவும் பெற்று; யானெனதென்னும் செருக்கின்றி வானோர்க்குயர்ந்த உலகம் புகுந்துவாழ நின் இன்னருள் புரிவீராக. உனக்கு வணக்கம்.

—சுவாமி சச்சிதானந்த யோகி

Regd at the G. P. O. as a news Paper H. C, 59/300

## ஆயுள்சந்தா ஆதரவாளர்கள்

திரு. A. S. அப்துல்காதர் — வதிளை
திரு. DR. S. முத்துக்குமாரசாமி — வதுளை
திரு. K. S. இரத்தினசாமி — வதுளை
திரு. S. இரத்தினாகரம் வழக்கறிஞர் — கொழும்பு
திரு முகாந்திரம் P. தர்மலிங்கம் — வவுனியா
திரு. பகவான் — பருத்தித்துறை

---

## இந்துமத பாலபாடம்

ஆசிரியர் ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்
நாகர்சோயில்

கிடைக்குமிடப்:- ஏ. என். நாச்சிமுத்துபிள்ளை
சதாசிவ டைப் ஆபீஸ், 5/23, முன்சிப்கோர்ட் சந்து,
கோயமுத்தூர் [S. I.]

விலை ரூபா ஒன்று.

---

"சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண்பா"

## திருக்குறள் வகுப்பு

கொழும்பு, மேட்டுத்தெரு.
விவேகானந்தசபைக் கல்லூரி மண்டபத்தில்,
விவேகானந்தசபை ஆதரவில்,

## ஞாயிற்றுக்கிழமைதோறும்

முற்பகல மணி 9-30 முதல் 11 வரை திருக்குறள் வகுப்புச்
செவ்வனே நடைபெற்று வருகின்றது.

ஆசிரியர்;-
சித்தாந்த பண்டித சிகாமணி,
புலவர். சிவன் கருணாலய பாண்டியனார்.

ஆர்வலரனைவர்க்கும் அரியதோர் வாய்ப்பு:
"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"

திருக்குறள் வகுப்பு மாணவர்.

சரவண அச்சகம் நாவலப்பிட்டி